FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8319492

1. District மாவட்டம்: Salem | PS காவல்நிலையம்: V.A.C | Year ஆண்டு: 2025 | FIR No. முதல் எண்: 151/AC/2025 | Date நாள்: 17.09.2025

2. (i) Act சட்டம்: The Prevention of corruption
(ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018
(iii) Act சட்டம்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

Sections பிரிவுகள்: 7 (a)
Sections பிரிவுகள்:
Sections பிரிவுகள்:

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to நாள் வரை: 12.09.2025 at about 11.00hrs

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை: 15.09.2025 at about 10.45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 17.09.2025
Time நேரம்: 07.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம்:

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்: Computer typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எந்தெசையும்: Arrour 50 Km. East

Beat Number : முதற் காவல் எண்
(b) Address : முகவரி: Attur Taluk office, Salem District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறைப்பட்டவர்/ தகவல் தந்தவர் பெயர்: G. Kumerasan
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: Govindhapillai

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 56
(d) Nationality : நாட்டினம்: Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில்: Farmer
(g) Address : முகவரி: D.No. 236 Rajeswari Nagar, Puthupeetrai Thulukkanur village, Attur Taluk, Salem District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / சந்தேகத்துக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்

1) Tmt Jeevitha, Field Surveyor, Attur Taluk office, Salem District.
2) Tr Kannadhasan

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறைப்பட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிடுவதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... .....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

17/5/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendran 17.5.2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.05.2025 08.45 hrs.

Name பெயர் N. Narendran
Rank நிலை Inspector of Police
No எண் V4 AC, Salem

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2025 சட்டப்பிரிவு 7 (a) of PC Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் வரிசை எண் 12 ன் தொடர்ச்சி.

இன்று 17.09.2025 ந் தேதி காலை 07.00 மணிக்கு சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்துபோது. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், துலுக்கனூர் கிராமம், புதுபேட்டை அஞ்சல், ராஜேஸ்வரி நகர், கதவு எண் 236, கோவிந்த பிள்ளை மகன் G.குமரேசன் என்பவர் அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர். G.குமரேசன், வயது 56, த.பெ. கோவிந்த பிள்ளை, கதவு எண் 236, ராஜேஸ்வரி நகர். புதுபேட்டை அஞ்சல், துலுக்கனூர் கிராமம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, சேலம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 4 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. அதில் நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகன் பெயர் அருள், இளைய மகன் பெயர் ஆனந்த், அவரது மனைவி பெயர் கலையரசி. எனது மருமகள் கலையரசி பெயரில் மனை நிலம் வாங்க முடிவு செய்து, எனது சொந்த தம்பி வெங்கடேசனுக்கு சொந்தமான சேலம், ஆத்தூர் வட்டம், துலுக்கனூர் கிராமம் ரத்திரி சாய்பு ஏறிகோடி அருகில் உள்ள 2 மனை நிலங்களை அவரிடமிருந்து கடந்த 20.08.2025 ந் தேதி விலைக்கு வாங்கி ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் செய்தோம். அன்றைய தினமே அந்த 2 மனைகளுக்கும் தலா ரூ 400/- பட்டா உட்பிரிவு செய்ய வேண்டி கட்டணமாக செலுத்தப்பட்டது. அதன்படி கடந்த 12.09.2025 ந் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு அந்த 2 மனை நிலங்களையும் அளக்க ஆத்தூர் தாலுகாக அலுவலகத்திலிருந்து திருமதி.ஜீவிதா என்ற சர்வேயரும், அவருடன் திரு.கண்ணதாசன் என்பவரும் வந்து அந்த 2 மனை நிலங்களையும் அளந்தார்கள். அளந்து முடித்தவுடன் சர்வேயர் திருமதி.ஜீவிதா 2 மனைகளை அளந்து தனி பட்டா வழங்குவதற்கு தலா ரூ 6,000/- வீதம், மொத்தம் ரூ 12,000/- தரவேண்டும் என்று கூறினார். அப்போது அங்கு இருந்த திரு.கண்ணதாசன் அவர்களும் சர்வேயர் அம்மா சொல்வது போல் ரூ 12,000/-த்தை கொடுத்துவிடுங்கள் பட்டா ஏற்பாடு செய்துவிடலாம் என்றும் சொன்னார். அதற்கு நான் தற்போது பணம் என்னிடம் இல்லை என்றும் எனது மகனிடம் தான் கேட்க வேண்டும் என்று கூறினேன். அதனால் அவர்கள் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வாருங்கள் தனிப்பட்டா வாங்கி கொள்ளலாம் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் 15.09.2025 ந் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு ஆத்தூர் தாலுக்கா அலுவலகம் சென்று

அங்கிருந்த சர்வேயர் திருமதி.ஜீவிதா அவர்களை சந்தித்தேன். அப்போது அவரிடம் தனி பட்டா வழங்க 12,000/- கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருந்தீர்கள். அதனால் உங்களை நேரில் பார்த்து பணம் ரூ 12.000/- த்தை குறைக்க சொல்லி கேட்டுட்டு போகலாம் என வந்ததாக தெரிவித்தேன். அதற்கு அவர் உட்காருங்க கண்ணதாசன் வந்திருட்டும் என்று சொல்லிவிட்டார். அதன் பின்னர் சிறிது நேரத்தில் திரு.கண்ணதாசன் அவர்கள் சர்வேயர் அலுவலகம் வந்தார். நான் அவரிடம் தனி பட்டா வழங்க ஏற்பாடு செய்ய கேட்ட பணம் ரூ 12,000/- ம் அதிகமாக இருக்கிறது கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் ரூ 2,000/- த்தை குறைத்துக்கொண்டு ரூ 10,000/- கொடுத்துவிடுங்கள் என்றும், பணத்தை கொடுத்தால்தான் தனிபட்டா உங்கள் மருமகள் பெயருக்கு ஏற்பாடு செய்யமுடியும் என கன்டிப்புடன் தெரிவித்துவிட்டு, வரும்போது தனது செல் போன் எண் 9790495241 க்கு போன் செய்துவிட்டு வாருங்கள் என்றும் சொல்லி அனுப்பிவிட்டார். ஆனால் எனக்கு ரூ 10,000/- லஞ்சமாக கொடுத்து எனது மருமகள் பெயரில் தனி பட்டா வாங்க விருப்பமில்லை. நான் ஆடு விற்று கிடைத்த பணத்தில் ரூ 10,000/-த்துடன் அவர்களை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, அவர்கள் இருவர் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/-xxxxxxxx (G.குமரேசன்) 17/9/2025.

Received the computer typed complaint today on 17.09.2025 at 07.00 hrs and registered a case in Salem V & AC Cr. No. 15/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 17.09.2025 at 07.45 hrs after making a confidential verification on the general reputation of the accused Tmt.Jeevitha, Field Surveyor, Attur Taluk Office, Salem District and Tr.Kannadhasan, which is learnt to be not good. Similarly, the antecedents of the informant was also verified and nothing came to adverse. Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. Sd. xxxxxx (N.Narendran) 17.9.2025, Inspector of Police, V & AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble court of the Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned.

N. Narendran 12-09-2025

(N.NARENDRAN)
Inspector of Police.
Vigilance and Anti-Corruption,
Salem.